# CENTRE FOR HEALTH AND GENDER EQUALITY

# (CHANGE) – TRUST

**61, 7th STREET, PUDUPET ROAD, TIRUPATTUR, TAMILNADU INDIA 635601**

**REG NO: 33/2013**

# ANNUAL REPORT

# 2021-2022

# (CHANGE) – TRUST

# ANNUAL REPORT

# FOR

# 2021-2022

## INTRODUCTION:

CHANGE TRUST is a registered voluntary organization . It was formed in 2013 and formally Register under the Indian Trust Act 1862. It has been working in Kandili,Tirupattur and Jolarpet blocks in Vellore District. CHANGE Trust Aiming for Promoting the holistic development of all the needy people in India and enhancing the quality of their life.

**OFFICE STAFF LIST**

| NO | NAME | QUALIFICATION | WORKING FROM | DESIGNATION |
|---|---|---|---|---|
| 1. | R.Saraswathi | B.A. (Socilogy) | 01.06. 2013 | Managing Director & Teustee Member |
| 2. | A. Palanivelsamy | M.A., B.Ed.,D.T.Ed. | 01.06.2013 | Secretary & Teustee Member |
| 3. | S. Vignesh | MSW | 08/08/2021 | C0-ordinator |
| 4. | S. Usha | +2 | 10.10.2013 | Field Staff |
| 5. | S. Thipanji | 10 | 01.05. 2017 | Field Staff |
| 6. | S. Parameswary | +1 | 09.09.2018 | Field Staff |
| 7. | M. Charitha | B.lit,D.T.Ed | 10.09 2015 | Office Staff |

## JUNE

## 2021

**05/06/2021** கிராம நலவாழ்வு விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது இதில் 30 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



**12/06/2021** குழந்தை தொழிலாளர்கள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு கசிநாயக்கன்பட்டி 500 மாணவர்களிடையே மற்றும் பெண்களிடையே விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது.







**15/06/2021** கோரோனோ விழிப்புணர்வை முன்னிட்டு குழந்தைகளுக்கு Face Mask மற்றும் hand wash மூலம் கைகழுவும் முறை பற்றி விழிப்புணர்வு கொடுக்கப்பட்டது.







**JULY**

**2021**

**24/07/2021** புதுப்பேட்டை சமுதாய சுகாதார நிலையத்திற்கு இரண்டு லட்சம் மதிப்புள்ள ஆக்சிஜன் செறிவுட்டல் கருவியை சேஞ்ச் தொண்டு நிறுவனம் மூலம் வழங்கப்பட்டது.





தின சங்கு நாளிதழ்

சத்தியமே சாத்தியம்

## திருப்பத்தூரில் சேஞ்ச் தொண்டு நிறுவனம் சார்பில்

## புதுப்பேட்டை சமுதாய சுகாதார நிலைய மருத்துவமனைக்கு 2 லட்சம் மதிப்பிலான ஆக்சிஜன் செறிவூட்டல் கருவியை வழங்கினர்

திருப்பத்தூர், ஜூலை.24-

திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி அடுத்த புதுப்பேட்டை சமுதாய சுகாதார நிலையத்தில் திருப்பத்தூர் மாவட்டம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை சார்பில் நியூமோகோக்கல் நிமோனியா மற்றும் மூளைக் காய்ச்சல் ஆகிய நோய்களில் இருந்து தேசிய தடுப்பூசி திட்டத்தின் கீழ் குழந்தைகள் பாதுகாப்பிற்கான நீயூமோகோக்கல் கான்ஜூகேட் தடுப்பூசி போடும் துவக்கவிழா மாவட்ட ஆட்சியர் அமர் குஷ்வாஹா தலைமையில் நடைபெற்றது.

மேலும் இந்த நிகழ்ச்சியில் 1.5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு தடுப்பு மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கு கொரோனா தடுப்பு போடப்பட்டது.

அது மட்டுமின்றி கர்ப்பிணி பெண்களுக்கு தாய் சேய் நல பெட்டகம் 10 பேருக்கு வழங்கப்பட்டது.

அதனை அடுத்து திருப்பத்தூர் சேஞ்ச் தொண்டு நிறுவனம் சார்பில் குனிச்சி சமுதாய சுகாதார நிலையத்திற்கு 2 லட்சம் மதிப்பிலான ஆக்சிஜன் செறிவூட்டல் கருவியை ஹாப்ஸ் நிறுவன இயக்குனர் பழனிவேல்சாமி மற்றும் சேஞ்ச் தொண்டு நிறுவன இயக்குனர் சரஸ்வதி மற்றும் உஷா சேஞ்ச் ஒருங்கிணைப்பாளர் சிவகுமார் ஆகியோர் இணைந்து கருவியை வழங்கினர்.



இனியன் டைம்ஸ்

INIYAN TIMES

Tamil Daily Morning Sunday to Friday

## திருப்பத்தூரில் சேஞ்ச் தொண்டு நிறுவனம் சார்பில்

## புதுப்பேட்டை சமுதாய சுகாதார நிலைய மருத்துவமனைக்கு 2 லட்சம் மதிப்பிலான ஆக்சிஜன் செறிவூட்டல் கருவி

திருப்பத்தூர், ஜுலை.25

திருப்பத்தூரில் சேஞ்ச் தொண்டு நிறுவனம் சார்பில் புதுப்பேட்டை சமுதாய சுகாதார நிலைய மருத்துவமனைக்கு 2 லட்சம் மதிப்பிலான ஆக்சிஜன் செறிவூட்டல் கருவியை வழங்கினர்.

திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி அடுத்த புதுப்பேட்டை சமுதாய சுகாதார நிலையத்தில் திருப்பத்தூர் மாவட்டம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை சார்பில் நியூமோகோக்கல் நிமோனியா மற்றும் மூளைக் காய்ச்சல் ஆகிய நோய்களில் இருந்து தேசிய தடுப்பூசி திட்டத்தின் கீழ் குழந்தைகள் பாதுகாப்பிற்கான நீயூமோகோக்கல் கான்ஜுகேட் தடுப்பூசி போடும் துவக்க விழா மாவட்ட ஆட்சியர் அமர்குஷ்வாஹா தலைமையில் நடைபெற்றது.

மேலும் இந்த நிகழ்ச்சியில் 1.5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு தடுப்பு மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கு கொரோனா தடுப்பு போடப்பட்டது. அது மட்டுமின்றி கர்ப்பிணி பெண்களுக்கு தாய் சேய் நல பெட்டகம் 10 பேருக்கு வழங்கப்பட்டது. அதனை அடுத்து திருப்பத்தூர் சேஞ்ச் தொண்டு நிறுவனம் சார்பில் குறிச்சி சமுதாய சுகாதார நிலையத்திற்கு 2 லட்சம் மதிப்பிலான ஆக்சிஜன் செறிவூட்டல் கருவியை ஹாப்ஸ் நிறுவன இயக்குனர் பழனிவேல்சாமி மற்றும் சேஞ்ச் தொண்டு நிறுவன இயக்குனர் சரஸ்வதி மற்றும் உஷா சேஞ்ச் ஒருங்கிணைப்பாளர் சிவகுமார் ஆகியோர் இணைந்து கருவியை வழங்கினர்.

**31/07/2021** அன்று கோரோனோ விழிப்புணர்வுக்காக மக்கள் நல வாழ்வு கூர்நோக்ககம் 3000 நோட்டீஸ் பொது மக்களுக்கு மற்றும் சமுதாய சுகாதார **நிலையத்தில்** வழங்கப்பட்டது.





## AUGUEST

## 2021

**1/08/2021** திருப்பத்தூர் குனிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்தில் கோரோனோ மூன்றாவது அலையை தடுப்பதற்கான முன்னேற்பாடுகள் நடத்த ஆய்வு செய்யப்பட்டது.





**4/08/2021** உலக தாய்ப் பால் வாரம் விழா கொண்டாடப்பட்டது.**இந்த ஆண்டின் (2021) உலக தாய்ப்பால் வார முழக்கம்** திருப்பத்தூர் மாவட்டம் கந்தலி ஒன்றிய கசிநாயக்கன்பட்டி ஊராட்சி வெங்கடேஷ் புரம் அங்கன்வாடியில் உலக தாய்ப்பால் வாரம் விழா நடைபெற்றது இதில் **மக்கள் நல வாழ்வு இயக்கம், தோழி கூட்டமைப்பு** தமிழ்நாடு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் இணைந்து நடத்தும் உலக தாய்ப்பால் வாரம் விழா நடைபெற்றது.



**5/08/2021** உலக தாய்ப் பால் வாரம் விழா கொண்டாடப்பட்டது. **இந்த ஆண்டின் (2021) உலக தாய்ப்பால் வார முழக்கம்** திருப்பத்தூர் மாவட்டம குனிச்சி PH யில் சமுதாய சுகாதார நிலையதில் நடைபெற்றது இதில் **மக்கள் நல வாழ்வு இயக்கம், தோழி கூட்டமைப்பு** தமிழ்நாடு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் இணைந்து நடத்தும் உலக தாய்ப்பால் வாரம் விழா நடைபெற்றது.





**6/08/21** உலக தாய்ப் பால் வாரம் விழா கொண்டாடப்பட்டது.**இந்த ஆண்டின் (2021) உலக தாய்ப்பால் வார முழக்கம்** திருப்பத்தூர் மாவட்டம குனிச்சி அரசு உயர்நிலை பள்ளியில் அங்கன்வாடியில் உலக தாய்ப்பால் வாரம் விழா நடைபெற்றது இதில் **மக்கள் நல வாழ்வு இயக்கம், தோழி கூட்டமைப்பு** தமிழ்நாடு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் இணைந்து நடத்தும் உலக தாய்ப்பால் வாரம் விழா நடைபெற்றது.





**மக்கள் நல வாழ்வு இயக்கம்**

**மக்கள் நல கூர்நோக்ககம்**

**தேதி-12.08.2021** **நேரம்-10am**

**பொருள்:**

அனைவருக்கும் நலவாழ்வு அடிப்படை உரிமை உறுதிப்படுத்துதல் திருப்பத்தூர் மாவட்டம் மாவட்ட அளவிலான திட்ட அறிமுக கூட்டம்.**DEEPS** நிறுவனம் தர்மபுரி **திரு.சங்கர்** அவர்களால் இக்கூட்டத்தில் மக்கள் நல சேவை கூர்நோக்ககம் குறித்து விவாதிக்கப்பட்டது இவற்றை திருப்பத்தூர் மாவட்டம் **CHANGE** தொண்டு நிறுவனம் **திருமதி சரஸ்வதி** அவர்களால் இக்கூட்டத்தை ஒருங்கிணைப்பு செய்தார்.

இதில் 20க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்

- பொதுத்துறை மருத்துவ சேவை அமைப்புகளை வலுப்படுத்துதல்.
- தானியர் மருத்துவ கட்டமைப்புகளை வலுப்படுத்துதல்.

பொதுத்துறை மற்றும் தனியார்த்துறை மருத்துவமனைகளை பற்றி அடிப்படை புள்ளி விவரம் சேகரித்தல்

பொது மக்களிடையே மருத்துவனைகளில் ஏற்படக்கூடிய பிரச்சனைகள் மற்றும் சட்ட ரீதியாக அவற்றை எப்படி அணுகுவது குறித்தும் கூட்டங்கள் நடத்துதல்

சமூக தன்னார்வலர்களுக்கு இது குறித்து பயிற்சி நடத்துதல் மற்றும் அவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்குதல்

பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் கண்டு சட்ட ரீதியாக ஆலோசனை வழங்குதல்

ஆவணப்படுத்தல்

பொதுமக்களுக்கு ஊடகங்கள் மூலம் மற்றும் சமூக வலைத்தளங்கள் பேஸ்பூக் வாட்சாப் ட்விட்டர் மூலம் இது குறித்து தெரியப்படுத்துதல்.



**16/08/2021** தனியார் மருத்துவமனையின் தவறான சிகிச்சையால் தாயை இழந்த பச்சிளம் குழந்தை! உறவினர்கள் கதறல்! மருத்துவமனை முற்றுகை!* தர்மபுரி மாவட்டம் ஓடமங்கலம் இருமத்தூர் பகுதியில் வசிப்பவர் அருண்குமார்(33). இவருக்கும் தர்மபுரி மாவட்டம் மத்தூர் நாகம்பட்டி பகுதியில் வசிக்கும் பொன்னுசாமி கிருஷ்ணவேணியின் மகள் ரம்யா (29) இவருக்கும் கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்பு திருமணம் நடந்துள்ளது. இவர்களுக்கு குழந்தை பாக்கியம் இல்லாத காரணத்தால் ஐந்து வருட காலமாக திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் கச்சேரி தெரு பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் குழந்தை வேண்டி சிகிச்சை பெற்று வந்தனர். அந்த தனியார் மருத்துவமனை தற்போது வரை சுமார் 5 லட்சம் வரையிலான தொகையினை வசூலித்துள்ளதாக தகவல் தெரிவிக்கின்றன இந்த நிலையில் அறுவை சிகிச்சையின் போது போடப்பட்ட தையலை பிரிக்க ரம்யா மற்றும் அவருடைய உறவினர்கள் மருத்துவமனைக்கு சென்றுள்ளனர்,தையல் பிரித்த பின்பு ரம்யாவுக்கு தவறான சிகிச்சை முறை அளிக்கப்பட்டதால் அவருடைய வயிறு வீக்கம் அடைந்து மரணத்துக்கு உள்ளாகியுள்ளார். தகவலறிந்து வந்த திருப்பத்தூர் நகர காவல் ஆய்வாளர் ஹேமாவதி மற்றும் போலீசார் உறவினர்களை சமாதானப் படுத்தும் பணியில் ஈடுபட்டு வந்தனர்.

**22.08.2021** காலை 10 மணிக்கு கொண்டநாயக்கன்பட்டி கிராமத்தில் நல்வாழ்வு கூர்நோக்ககம் சேவை மூலம் குனிச்சி சமுதாய சுகாதார நிலையமும் சேஞ்ச் நிறுவனம் மற்றும் ஹப்ஸ் நிறுவனமும் இணைந்து இணைத்து நடத்திய கொரோனா தடுப்பூசி முகாம் நடைபெற்றது இதில் குனிச்சி சமுதாய சுகாதார நிலைய மருத்துவர் தீபா ஆவார்கள் பயனாளிகளை மருத்துவ பரிசோதனை செய்து பின்னர் பயனாளிகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.பகுதி செவிலியர். கிராம சுகாதார செவிலியர்கள்.சரஸ்வதி சேஞ்ச் நிறுவன இயக்குனர்.உஷா ஹப்ஸ் ஒருங்கிணைப்பாளர்.நளினி பெண் தொழிலாளர்கள் நல சங்க பொருள்லார் மற்றும் விக்னேஷ் சேஞ்ச் ஒருங்கிணைப்பாளர் அனைவருயும் கொரோனா தடுப்பூசி பற்றி விழிப்புணர்வு வழங்கி அனைவருயும் ஒருங்கிணைப்பு செய்தோம்.





15/08/2021 அன்று சேஞ்ச் தொண்டு நிறுவன அலுவலகத்தில் தோழி பெண் தொழிலாளர்கள் சங்க அமைப்பாளர்கள் பெருளாளர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு மாநில மற்றும் மத்திய அரசால் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்து விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது இதில் சங்க உறுப்பினர்கள் பேர் கலந்து கொண்டனர்.



**22.8.21** நலசேவை கூர்நோக்ககம் கொரோனா தடுப்பூசி முகாம் நடைபெற்றது 33.பயனாளிகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.அன்று மாலை 23.8.21 காலை கொரோனா தடுப்பூசி போடப்பட்ட பயனாளிகளிடம் போன் மூலம் உடல் நலம் விசாரித்தோம் யாரும் பிரச்சினைகள் இல்லை.ஆனால் ஒருவர்க்கு மட்டும் லேசா ஊசி பொட்ட கை வழி என்று கூறினார்கள்.



**SEPTEMBER**

**2021**

# திருப்பத்தூர் மாவட்ட அங்கன்வாடி தகவல்கள் மற்றும் விவரங்கள்

## திருப்பத்தூர் ஒன்றியம்

| | |
|---|---|
| திருப்பத்தூர் அங்கன்வாடிகளில் மொத்த எண்ணிக்கை | 136 |
| நடைமுறையில் உள்ள அங்கன்வாடிகளில் எண்ணிக்கை | 118 |
| இலவச கட்டிடத்தில் நடைபெறும் அங்கன்வாடிகளில் எண்ணிக்கை | 6 |
| வாடகை கட்டிடத்தில் நடைபெறும் அங்கன்வாடிகளில் எண்ணிக்கை | 12 |
| **பணியாளர்கள் தகவல்:** | |
| அங்கன்வாடிகளில் பணியாளர்களின் எண்ணிக்கை | 112 |
| காலிப்பணியிடங்கள் எண்ணிக்கை | 24 |
| அங்கன்வாடி உதவியாளர்கள் எண்ணிக்கை | 104 |
| காலிப்பணியிடங்கள் எண்ணிக்கை | 32 |

| | |
|---|---|
| திருப்பத்தூர் ஒன்றிய அளவில் அங்கன்வாடிகளில் இரண்டில் இருந்து ஐந்து வயது வரை உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை | 3965 |

## கந்திலி ஒன்றியம்

| | |
|---|---|
| கந்திலி அங்கன்வாடியில் இரண்டிலிருந்து ஐந்து வயது வரை உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை | 4400 |
| கந்திலி அங்கன்வாடியிகளில் மொத்த எண்ணிக்கை | 52 |
| அரசு அங்கன்வாடிகளில் எண்ணிக்கை | 122 |
| வாடகை கட்டிடத்தில் நடைபெறும் அங்கன்வாடிகளில் எண்ணிக்கை | 14 |
| இலவச கட்டிடத்தில் நடைபெறும் அங்கன்வாடிகளில் எண்ணிக்கை | 16 |
| **பணியாளர்கள் தகவல்** | |
| அங்கன்வாடிகளில் பணியாளர்களின் எண்ணிக்கை | 121 |
| காலிப்பணியிடங்கள் எண்ணிக்கை | 31 |
| அங்கன்வாடிகளில் உதவியாளர்கள் எண்ணிக்கை | 122 |
| காலிப்பணியிடங்கள் எண்ணிக்கை | 30 |

**ஆலங்காயம் ஒன்றியம்**

| | |
|---|---|
| அங்கன்வாடிகளில் மொத்த எண்ணிக்கை | 143 |
| சொந்த கட்டிடத்தில் நடைபெறும் அங்கன்வாடிகளில் எண்ணிக்கை | 118 |
| வாடகை கட்டிடத்தில் நடைபெறும் அங்கன்வாடிகளில் எண்ணிக்கை | 25 |
| இலவச கட்டிடத்தில் நடைபெறும் அங்கன்வாடிகளில் எண்ணிக்கை | - |
| **பணியாளர்கள் தகவல்** | |
| அங்கன்வாடிகளில் பணியாளர்களின் எண்ணிக்கை | 118 |
| காலிப்பணியிடங்கள் எண்ணிக்கை | 25 |
| அங்கன்வாடிகளில் உதவியாளர்கள் எண்ணிக்கை | 108 |
| காலிப்பணியிடங்கள் எண்ணிக்கை | 35 |

**ஜோலார்பேட்டை ஒன்றியம்**

| | |
|---|---|
| அங்கன்வாடிகளில் மொத்த எண்ணிக்கை | 190 |
| இலவச கட்டிடத்தில் நடைபெறும் அங்கன்வாடிகளில் எண்ணிக்கை | 130 |
| வாடகை கட்டிடத்தில் நடைபெறும் அங்கன்வாடிகளில் எண்ணிக்கை | 60 |
| **பணியாளர்கள் தகவல்** | |
| அங்கன்வாடிகளில் பணியாளர்களின் எண்ணிக்கை | 156 |
| காலிப்பணியிடங்கள் எண்ணிக்கை | 36 |
| அங்கன்வாடிகளில் உதவியாளர்கள் எண்ணிக்கை | 188 |
| காலிப்பணியிடங்கள் எண்ணிக்கை | 32 |

**மாதனூர் ஒன்றியம்**

| | |
|---|---|
| மாதனூர்அங்கன்வாடிகளில் மொத்த எண்ணிக்கை | 121 |
| வாடகை கட்டிடத்தில் நடைபெறும் அங்கன்வாடிகளில் எண்ணிக்கை | 8 |
| இலவச கட்டிடத்தில் நடைபெறும் அங்கன்வாடிகளில் எண்ணிக்கை | 1 |
| சொந்த கட்டிடத்தில் நடைபெறும் அங்கன்வாடிகளில் எண்ணிக்கை | 112 |
| **பணியாளர்கள் தகவல்** | |
| அங்கன்வாடிகளில் பணியாளர்களின் எண்ணிக்கை | 85 |
| காலிப்பணியிடங்கள் எண்ணிக்கை | 36 |
| அங்கன்வாடிகளில் உதவியாளர்கள் எண்ணிக்கை | 85 |
| காலிப்பணியிடங்கள் எண்ணிக்கை | 36 |

## புள்ளி விவரம்

## திருப்பத்தூர் சுகாதார மாவட்ட மொத்த தகவல்

| | |
|---|---|
| CHC மொத்த எண்ணிக்கை (ஒன்றியம்) | 6 |
| PHC மொத்த எண்ணிக்கை | 37 |
| URBAN | 25 |
| RURAL | 12 |
| HSC மொத்த எண்ணிக்கை | 162 |
| URBAN | 28 |
| RURAL | 134 |
| **பணியாளர்கள் தகவல்** | |
| மருத்துவர்களின் மொத்த எண்ணிக்கை | 116 |
| பணியில் உள்ளவர்கள் | 115 |
| காலிப்பணியிடங்கள் | 1 |

| | |
|---|---|
| தற்போது உள்ள மினி கிளினிக் எண்ணிக்கை | 44 |
| VHN எண்ணிக்கை | 150 |
| புதிதாக உள்ளவை | 12 |
| **பணியாளர்கள் தகவல்** | |
| மருத்துவர்களின் மொத்த எண்ணிக்கை | 44 |

## THIRUPATTUR HOSPITALS DETIALS

| | |
|---|---|
| TIRUPATTUR HOSPITALS | 32 |
| MOTHER CHILD CARE HOSPITALS | 13 |
| PRIVATE CLINIC | 8 |
| AMBULANCES | 3 |
| FIRST AID CLASS | 1 |

**02 SEP**,ஆம்பூர் அரசு மருத்துவமனையில் தலைமை மருத்துவரிடம் நலவாழ்வு கூர்நோக்ககம் பற்றி அறிமுகம் மற்றும் விளக்கம்.






**13 Sep**,ஆம்பூர் அரசு மருத்துவமனையில் கொரோனா தடுப்பூசி போட்ட நபரிடம் கலந்துரையாடல்.





**14 Sep**,ஆலங்காயம் அங்கன்வாடியில் கொரோனா விழிப்புணர்வு.



**14 Sep** திருப்பத்தூர் மற்றபள்ளி கிராமத்தில் பெண் தொழிலாளர்களை சந்தித்து தோழி பெண் தொழிலாளர்கள் சங்கத்தின் நோக்கத்தை பற்றியும் சங்கத்தின் செயல்பாடுகள் குறித்தும் விளக்கப்பட்டது தமிழக அரசால் வழங்கப்படும் சேவைகள் குறித்து விழிப்புணரவு அளிக்கப்பட்டது.



**15 Sep**,நரியனேரி கொரோனா விழிப்புணர்வு மற்றும் நலவாழ்வு கூர்நோக்ககம் சேவை பற்றி தன்னார்வலர் கூட்டம்.




**15 Sep** மட்றப்பள்ளியில் நலவாழவு சேவை மற்றும் தன்னார்வாளர்கள் கூட்டம் இதில் கொரோனா விழிப்புணர்வு பற்றியும் தடுப்பூசியின் பயன்கள் குறித்து விவாதிக்கப்பட்டு ஆலோசனை வழங்கப்பட்டது.



**16 Sep** மக்கள் நலசேவை கூர்நோக்ககம் மாவட்ட அளவிலான தன்னார்வலர் பயிற்சி.

**திரு சுரேஷ்** மக்கள் நலவாழ்வு இயக்கம் மாநில பொறுப்பாளர் தன்னார்வலர் அறிமுக கூட்டத்தில் பயிற்சியாளராக கலந்துகொண்டு பயிற்சி அளித்தார் பயிற்சியில் இந்த கொரோனா நெருக்கடியில் வாழ்வாதாரம் இழந்த நிலையில் மறக்கமுடியாத அனுபவங்களை தன்னார்வலர்களிடம் கேட்டறிந்து அதன் விளைவுகளை இனிமேல் வரும்காலங்களில் எப்படி கையாளுவது என்பது குறித்தும் கூறினார். மற்றும் தடுப்பூசி போட்டு கொண்டத்திற்கான நோக்கங்கள் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி போடலாம் என்று தடுப்பூசியின் பயன்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

தன்னார்வலர் பயிற்சி வகுப்பில் அரசு மருத்துவமனைகள் பற்றியும் அவற்றின் பயன்கள் பற்றியும் அரசு மருத்துவமனை மூலம் எவ்வகையான பயன்கள் பெறலாம் மற்றும் அரசு மருத்துவமனையில் முறையான பராமரிப்பு பாதுகாப்பு தூய்மையான சுற்றுசூழல் இல்லாவிடில் அவற்றை சரி செய்வதற்கான அணுகுமுறை குறித்தும் ஆலோசனை வழங்கினார்.




**16 Sep** கசிநாயக்கன்பட்டியில் மக்கள் நலவாழ்வு கூர்நோக்ககம் வளரிளம் பெண்கள் மற்றும் குழந்தைகள் சந்திப்பு

தாய்மார்கள் குழந்தைகளுக்கான ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது இது தொடர்பாக மக்கள் நலவாழ்வு இயக்கம் மாநில பொறுப்பாளர் திரு சுரேஷ் அவர்கள் திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி ஒன்றியம் கசிநாயக்கன்பட்டி கிராம மக்களை சந்தித்து குழந்தைகள் தாய்மார்கள் கற்பினி பெண்களுக்கு ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து குறித்து விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது.இதில் சேன்ஞ் மற்றும் ஹப்ஸ் நிறுவனங்கள் மூலம் கொரோனா பற்றிய விழிப்புணர்வும் நடத்தபட்டது.





**17 Sep** கந்திலி ஒன்றிய கசிநாயக்கன்பட்டி வெங்டேசபுரம் அங்கன்வாடியில் மக்கள் நலசேவை பச்சிளங்குழந்தைகள் மற்றும் தாய்மார்களை சந்தித்து ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியம் குறித்து விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது.

அங்கன்வாடி தாய்மார்கள் குழந்தைகளுக்கான ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது இது தொடர்பாக மக்கள் நலவாழ்வு இயக்கம் மாநில பொறுப்பாளர் திரு சுரேஷ் அவர்கள் திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி ஒன்றியம் கசிநாயக்கன்பட்டி கிராமத்தில் அங்கன்வாடியை மேற்பார்வையிட்டு அங்கு இருக்கும் குழந்தைகளின் பெற்றோர்கள் தாய்மார்கள் கற்பினி பெண்களுக்கு ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து குறித்து விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது. இதில் சேன்ஞ் மற்றும் ஹப்ஸ் நிறுவனம்கள் மூலம் கொரோனா பற்றிய விழிப்புணர்வும் நடத்தபட்டது.





\

**20 Sep** ஆதியூரில் கொரோனா காலத்தில் பணி செய்தமைக்காக துப்புரவு பணியாளர்களுக்கு நலதிட்ட உதவி வழங்கப்பட்டு 20 க்கும் மேற்பட்ட துப்புரவு பணியாளர்களை ஊக்குவித்து அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டது.





**23 Sep** ஆலங்காயம் மாதனூர் ஜோலார்பேட்டை கந்திலி மற்றும் திருப்பத்தூர் ஒன்றியத்தில் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் சந்திப்பு மற்றும்.அங்கன்வாடி தகவல்களை பெறுவதற்காக.



**24 Sep** 500 பேருக்கு மேற்பட்ட மத்திய அரசால் வழங்கப்படும் இரண்டு லட்சரூபாய் திட்டமதிப்புள்ள இஸ்ரம் கார்டு வாங்கி கொடுக்கப்பட்டது.





**26 Sep** காசிநாயக்கன்பட்டியில் கொரோனா தடுப்பூசி முகாமில் கலந்துகொண்டு தடுப்பூசி செலுத்தியவர்களின் விவரம் சேகரித்தார்.



**27 Sep** தூய்நெஞ்ச கல்லூரி மாணவர்களை சந்தித்து ஜானகி பொன்னுசாமி நிதிஉதவி பெறும் பள்ளியில் மக்கள் நலசேவை கூர்நோக்ககம் குறித்து விளக்குதல், மற்றும் தன்னார்வலர்களை இணைத்து விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது.



# OCTOBER

**2021**

**03/10/2021** திருப்பத்தூர் தனியார் மருத்துவமனைகளை களஆய்வு மேற்கொள்ளப்பட்டது..





**04/10/2021** திருப்பத்தூர் தனியார் மருத்துவமனைகளை களஆய்வு மேற்கொள்ளப்பட்டது.




**03/10/2021** அன்று மதியம் தோழி பெண் தொழிலாளர்கள் நல சங்க உறுப்பினர்களுக்கு குழு கூட்டம் நடத்தி அவர்களின் பிரச்சனைகள் குறித்து விவாதிக்கப்பட்டு அவற்றை எவ்வாறு கையாளுவது சட்ட ரீதியாக அணுகுவதற்கான வழிமுறைகள் பற்றி அக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது இதில் க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டனர் தோழி பெண் தொழிலாளர்கள் நல சங்க செயலாளர் உஷா இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து நடத்தினார்.




**07/10/2021** பெரியகாரம் அங்கன்வாடி கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**13,15,19/10/2021** அன்று மூன்று நாளைக்கும் தேர்வு செய்யப்பட்ட ஊராட்சி மன்ற தலைவர்களை சந்தித்து கிராம நீர் ஊட்டச்சத்து மற்றும் துப்புரவு குழு பற்றி விளக்கம்.




**18/10/2021** அன்று திருப்பத்தூர் பெரியகரம் கிராமத்தில் கோரோனோ தடுப்பூசி செலுத்திக்கொள்வதின் அவசியத்தையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் குறித்து விழிப்புணர்வு அளிக்கப்பட்டது.



**22/10/2021** அன்று பெரியகாரம் கர்ப்பிணி தாய்மார்களை சந்திப்பு.



**24/10/2021** அன்று சேஞ்ச் தொண்டு நிறுவன அலுவலகத்தில் தொழிலாளர்களுக்கு அரசால் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்தும் பெண் தொழிலாளர்கள் நல சங்கத்தின் செயல்பாடுகள் குறித்தும் சேஞ்ச் தொண்டு நிறுவனர் சரஸ்வதி அவர்கள் விளக்கினார் மற்றும் கோரோனா தடுப்பூசி செலுத்துவதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு கொடுக்கப்பட்டது.



,



**26.10.21** அன்று திருப்பத்தூர் மாவட்ட நலவாழ்வு கூர்நோக்ககத்தின் சார்பில் நல வாழ்வு குறித்த ஆலோசனை கூட்டம் சேஞ்ச் தொண்டு நிறுவன அலுவலகத்தில் , ஆசிரியர் ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது . இதில் அங்கன்வாடி மையங்கள் மற்றும் பள்ளி கட்டமைப்பின் நிலைகள் பற்றி ஆலோசனை செய்யப்பட்டது. கிராமப்புற வளர் இளம் பெண்களுக்கு மற்றும் வளர் இளம் ஆண்களுக்கும் நல கல்வி வழங்க முடிவு செய்யப்பட்டது. நலவாழ்வு கூர்நோக்ககம் செயல்பாடுகள் பற்றி ஹேப்ஸ் இயக்குநர் பழனிவேல்சாமி விளக்கமாக கூறினார். மக்கள் நலவாழ்வு இயக்கத்தின் பணிகள் பற்றி விவாதிக்கப்பட்டது. தனியார் மருத்துவமனைகளை எவ்வாறு முறை படுத்தலாம் அரசு மருத்துவமனைகளை எவ்வாறு வலுப்படுத்தலாம் அதற்காக நாம் செய்ய வேண்டியது என்ன தற்போது நல வாழ்வு நிலை என்ன என்பது குறித்து கலந்துரையாடப்பட்டது. இதற்கான ஒருங்கிணைப்பு பணிகளை சேஞ்ச் நிர்வாக இயக்குனர் சரஸ்வதி செய்திருந்தார். இதில் உள்ளாட்சி பிரதிநிதிகள் தன்னார்வலர்கள் மற்றும் கிராம சுகாதார குழு உறுப்பினர்கள் 35 நபர்கள் கலந்து கொண்டனர்.






**27.10.21** காலையில் திருப்பத்தூர் மாவட்ட நட்டறம்பள்ளி. அரசு மருத்துவமனையில் மக்கள் நல சேவை கூர்நோக்ககம் செயல்படை மூலம் கள ஆய்வு.






## NOVEMBER

## 2021

**1.11.2021** திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி ஒன்றியம் நரியனேரி ஊராட்சியில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி இரண்டு வருடங்கள் கழித்து திறக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில். சேஞ்சு நிறுவன இயக்குனர் சரஸ்வதி, ஹேப்ஸ் நிறுவன இயக்குனர் பழனிவேல்சாமி இணைந்து பள்ளி மாணவர்களுக்கு முக கவசம் ஹேண்ட் வாஷ். இனிப்புகள் மற்றும் ரோஜாப்பூக்கள் கொடுத்து பள்ளி மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு நடைபெற்று . பள்ளி மாணவர்களுக்கு கொரோனா விழிப்புணர்வு வழங்கப்பட்டது. 1 பள்ளிக்கு சுத்தமாக வரவேண்டும். 2. பள்ளி வளாகத்திற்கு வந்ததும் சோப் போட்டு கை கழுவுதல். 3. முக கவசம் அணிதல். 4. ஒவ்வொருவருக்கும் இடைவெளி இருக்க வேண்டும் என்று ஆலோசனை கூறினார்கள் .சேஞ்ச் நிறுவன ஒருங்கிணைப்பாளர்கள் உஷா, விக்னேஷ் மாணவர்களுக்கு கிருமிநாசினி அளித்து கைகளை சுத்தம் செய்தனர்.






**02.11.2021** திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூரில் இன்று மாலை 4.00 மணிக்கு சேஞ்ச் நிறுவனம் மற்றும் டீப்ஸ் நிறுவனம் இணைந்து 15 பள்ளி மாணவிகளுக்கு கைபேசி, நோட்டு, பென், பென்சில் , ஸ்கூல் பேக் ஆகியவற்றை முதன்மை கல்வி அலுவலர் ஐயணன் தலைமையில் வழங்கினார்கள். ஹேப்ஸ் நிறுவன இயக்குநர் - பழனிவேல் சாமி இந்நிகழ்விற்கு ஏற்பாடு செய்தார். ஏழை மாணவிகள் பட்டியலை சேஞ்ச் நிறுவன இயக்குநர் சரஸ்வதி தயார் செய்தார். வழக்கறிஞர் அமுதானந்தன் ஒருங்கிணைப்பு செய்தார் . பள்ளி மாணவிகளுக்கு உபகரணங்களை

கொடுத்த முதன்மை கல்வி அலுவலர், அவர்கள் கல்வியில் முன்னேற்றமடையவும் வாழ்க்கையில் சாதனை படைக்கவும் அறிவுரை கூறினார். சேஞ்ச் ஒருங்கிணைப்பாளர்கள் உஷா மற்றும் விக்னேஷ் நன்றி கூறினார்கள்.





**05/11/21** திருப்பத்தூர் மாவட்ட சேஞ்ச் நிறுவனம் மற்றும் ஹேப்ஸ் நிறுவனம் இனைத்து ஏழை குழந்தைகளுக்கு தீபாவளி பாரிசு துணிகள் பட்டாசு குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது. சேஞ்ச் சேஞ்ச் நிறுவன சரஸ்வதி. ஹேப்ஸ் நிறுவன இயக்குநர் பழனிவேல் சாமி . சேஞ்ச் ஒருங்கிணைப்பாளர்கள் உஷா மற்றும் விக்னேஷ் இயக்குநர்.




**6.11.21** திருப்பத்தூர் ஜோலார்பேட்டையில் சேஞ்ச் தொண்டு நிறுவனம் பெண் தொழிலாளர்களை திரட்டி குழு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது இக்கூட்டத்தில் பல தீர்மானங்கள் போடப்பட்டது தோழி பெண் தொழிலாளர்கள் நல சங்கத்தில் இணையவேண்டும் , தமிழக அரசால் வழங்கப்படும் நலத்திட்டங்கள் பெற வழிவகை செய்தல் , பணியிடங்களில் பிரச்சனைகள் பற்றி விவாதித்து அவற்றை தீர்வு காணும் முயற்சியில் ஈடுபடுதல் , ஏழை எளிய மக்களுக்கு கிடைக்கவேண்டிய நலத்திட்ட

உதவிகளை அனைத்தும் முழுமையாக கொண்டு சேர்த்தல் போன்ற தீர்மானங்களை தொழிலாளர்கள் முன் வைக்கப்பட்டன மேலும் அவர்களுக்கு விழிப்புணர்வும் ஏற்படுத்தபட்டது.




**7.11.21** மதியம் ஜம்மணாபுதூர் காலனி பகுதியில் வளர் இளம் பெண்களுக்கு நல சேவை கூர்நோக்ககம் செயல்படை மூலம் விழிப்புணர்வு வழங்கப்பட்டது.






**17/11/21** மதியம் 12. 30 மணிக்கு நல்லதம்பி திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களை சந்தித்து நல்வாழ்வு கூர்நோக்ககம் செயல்படை பற்றி அறிமுகம் செய்து மக்கள் நல்வாழ்வு இயக்கம் புத்தகம் கொடுத்து நல்வாழ்வு கோரிக்கை முன் வைத்தோம்.




**18/11/21** கந்திலி ஒன்றியம் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி செல்வி அவர்களை சந்தித்து சேஞ்ச் மற்றும் ஹேப்ஸ் நிறுவனம் அங்கன்வாடி மையங்களில் நவம்பர்-21 அங்கன்வாடி தினம் மற்றும் அங்கன்வாடி சீர்திருவிழா நடத்துதல் அங்கன்வாடி தினம் நவம்பர்-21 ஆம் தேதி ஐந்து மையங்களிலும் அங்கன்வாடி சீர்திருவிழா நவம்பர்-24 மற்றும் 25 ஆகிய தேதிகளில் இரண்டு மையங்களிலும் நடத்த அனுமதி கோரினோம்.




**20/11/2021 பீடி தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பீடியின் விலையை உயர்த்துவதற்காகவும் அவ்விலையை உயர்த்துவதன் மூலம் நுகர்வோரின் வாங்கும் அளவு குறைய வாய்ப்புள்ளதாகவும் இதன் மூலம் வர கூடிய நோய்களை கட்டுப்படுத்த வாய்ப்புள்ளதாகவும் என்ற நோக்கில் பீடி தொழிலாளர்கள் அனைவரும் பாரத பிரதமர் மோடி அவர்களுக்கு கடிதம் எழுதி அனுப்பப்பட்டது.**




**21/11/2021** ஆதியூர் மற்றும் பம்பார்த்தம்பட்டியில் அங்கன்வாடி தினத்தை முன்னிட்டு அங்கன்வாடி மையத்தின் தரத்தை மேம்படுத்துவதற்காகவும் அங்கன்வாடி பணியாளர்களை ஊக்குவித்து அவர்களை சிறப்பு செய்யப்பட்டது**.**









**23/11/2021** அங்கன்வாடி தினத்தை முன்னிட்டு எங்கள் சேஞ்ச் தொண்டு நிறுவனம்அங்கன்வாடி தினவிழாவை சிறப்பித்து நடத்தியது.சேஞ்ச் நிறுவன இயக்குனர் **சரஸ்வதி** மற்றும் ஹேப்ஸ் நிறுவன இயக்குனர் **பழனிவேல்சாமி** அவர்கள் தலைமை வகித்து இவ்விழாவை சிறப்பித்தனர்.இந்நிகழ்ச்சிக்கு **DR. சௌமியா** அவர்கள் முன்னிலை வகித்தார்.மற்றும் இதில் குனிச்சி பஞ்சாயத்து **தலைவர் மரகதம்** உள்ளாட்சி **பிரதிநிதிகள்** போன்றோர் கலந்துகொணடனர். இவ்விழாவில் 150 மேற்பட்ட அங்கன்வாடி பணியாளர்கள் கலந்துகொண்டனர் அங்கன்வாடி பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் சேஞ்ச் தொண்டு நிறுவனம் சார்பாக அவர்களுக்கு தங்க மெடல் வழங்கப்பட்டு அவர்களை சிறப்பித்தோம் பஞ்சாயத்து தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளை ஊக்குவிக்கும் விதமாக அவர்களுக்கு சேஞ்ச் தொண்டு நிறுவனம் கேடயம் வழங்கி சிறப்பு செய்யப்பட்டது.











# அங்கன்வாடி தின விழா

திருப்பத்தூர்,நவ.23-

குனிச்சியில் உள்ள சமுதாய சுகாதார நிலையத்தில் அங்கன்வாடி தினம் நேற்று கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சிக்கு டாக்டர் சவுமியா முன்னிலை வகித்தார். சேஞ்ச் நிறுவன இயக்குநர் சரஸ்வதி தலைமை வகித்தார்.

இதில், அங்கன்வாடியை தூய்மையாக வைத்திருத்தல், சமூக பங்கேற்புடன் குழந்தை நேர மையமாக கட்டமைத்தல், முன்பருவக்கல்வி, ஊட்டச்சத்து, உணவு மற்றும் நலவாழ்வு சேவைகளை தரமானதாக மாற்றுதல் என அனைவரும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். இதில், குனிச்சி பஞ். தலைவர் மரகதம், உள்ளாட்சி பிரதிநிதிகள், சேஞ்சி நிறுவன ஒருங்கிணைப்பாளர்கள் உஷா, விக்னேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**25/11/2021** அன்று குறும்பேரி அங்கன்வாடியில் சீர் திருவிழா நடைபெற்றது அங்கன்வாடிக்கு தேவையான பொருட்கள் மற்றும் குழந்தைகளின் திறன்மேம்பாட்டிற்கான பயிற்சி உபகரணங்கள் விளையாட்டு பொருட்கள் போன்றவற்றை அங்கன்வாடிக்கு வழங்கப்பட்டது.





b


**26/11/2021** கந்திலி ஒன்றியம் செவ்வாத்தூர் ஊராட்சி கவுண்டப்பனூர் 26 நவம்பர் 2021 காலை 10AM திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி ஒன்றியம் செவ்வாத்தூர் ஊராட்சி கவுண்டப்பனூர் குக்கிராமத்தில் உள்ள ஆங்கன்வாடியில் சீர் திருவிழா சேஞ்ச் தொண்டு நிறுவனமும், தமிழ்நாடு இளம் குழந்தைகள் பராமரிப்பு கூட்டமைப்பு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் இணைந்து நடத்தும் ஆங்கன்வாடி சீர் திருவிழா. இந்த விழாவிற்கு தலைமைதாங்கி நடத்திய ஊராட்சி மன்ற தலைவர் **மோகனா**. இவர்களின் தலைமையில் நடைபெற்றது. பள்ளி தலைமை ஆசிரியர் **கோவிந்தராஜ்** மற்றும் பள்ளி **ஆசிரியர்கள்** முன்னிலையில் இவ்விழா நடைபெற்றது..ஆங்கன்வாடி சீர் திருவிழாவில் முக்கிய பங்கு வகிக்கும் சரஸ்வதி சேஞ்ச் தொண்டு நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் மற்றும் சேஞ்ச் தொண்டு நிறுவனத்தின் பவுண்டர் பழனிவேல்சாமி, ஆங்கன்வாடி சீர் திருவிழாவிற்கான அணைத்து பொருட்களையும் சேஞ்ச் தொண்டு நிறுவனம் சார்பாகவும் மற்றும் ஊர் பொது மக்கள் சார்பாகவும் ரூபாய் 8.000 பொதுமக்களிடம் நன்கொடை பெற்று அங்கன்வாடிக்கு தேவையான பொருட்கள் மற்றும் குழந்தைகளின் திறன்மேம்பாட்டிற்கான பயிற்சி பொருட்கள் விளையாட்டு வகைகள் ஆகியவற்றை வழங்கி சிறப்பு செய்தது மேலும் சேஞ்ச் தொண்டு நிறுவனம் ரூபாய் 10,000 தொண்டு நிறுவனம் சார்பாக வழங்கி 18000 மதிப்புடைய பொருட்களை ஆங்கன்வாடிக்கு வழங்கப்பட்டது.







**<u>DECEMBER</u>**

**<u>2021</u>**

**01/12/2021**

திருப்பத்தூர் மாவட்டம் நேயம் தொண்டு அறக்கட்டளை மற்றும் சேஞ்ச் தொண்டு நிறுவனம் இணைந்து

ஆம்பூர் வாணியம்பாடி பகுதிகளில் மழையால் பாதிப்படைந்த வீடு இடிந்தவர்கள் மற்றும் வீடு இழந்தவர்கள் உடைமைகள் உயிரிலந்த குடும்பங்களுக்கு நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டது.

அரிசி,,பருப்பு, உளுத்தம் பருப்பு எண்ணெய் சர்க்கரை கொசுவர்த்தி சோப்பு மெழுகுவர்த்தி தீப்பொட்டி மற்றும் குழந்தைகளுக்கு தேவையான பிஸ்கட் பால் பவுடர் கேக் (மற்றும்) வீட்டுக்கு தேவையான பெட்ஷீட் டவல் லுங்கி நைட்டி நாப்கின்.

ஆகிய 2000 ரூபாய் மதிப்புள்ள பொருட்களை ஒவ்வொரு 150 குடும்பத்திற்கும் வழங்கப்பட்டது.

திருமதி சரஸ்வதி சேஞ்ச் நிர்வாக இயக்குனர் மற்றும் பழனிவேல்சாமி ஹேப்ஸ் நிர்வாக இயக்குனர் இவர்கள் முன்னிலையில் பாதிப்படைந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டது.








**22/12/2021**

தமிழக முதல்வர் மு கா ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க அணைத்து ஊராட்சிமன்ற தலைவர்களுக்கும் ஒரு நாள் புத்தாக்க பயிற்சி நடைபெற்றது

இக்கூட்டத்தில் கந்திலி ஒன்றிய ஊராட்சி தலைவர்கள் கலந்து கொண்டனர்

திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு நல்லதம்பி அவர்கள் கலந்து கொண்டு இந்நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்

அணைத்து ஊராட்சி மன்ற தலைவர்களையும் சிறப்பு செய்து அவர்களை ஊக்குவிக்கப்பட்டது

இக்கூட்டத்தில் அங்கன்வாடிக்கு தேவையான பொருட்கள் பற்றயும் குழந்தைகள் வளர்ச்சிக்கான ஊட்டச்சத்து பற்றயும் உணவு முறைகள் பற்றியும் பயிற்சி நடத்தப்பட்டது

இதில் கந்திலி ஒன்றிய அங்கன்வாடி பணியாளர்கள் இப்பயிற்சியில் கலந்துகொண்டனர்

சரஸ்வதி சேன்ச் தொண்டு நிறுவனர் மக்கள் நல வாழ்வு குறித்தும் அதன் கூர்நோக்ககம் குறித்தும் விளக்கினார்

கோரோனோ காலங்களில் மக்கள் நல சேவை குறித்தும் மக்கள் நல வாழ்வு இயக்கத்தின் கோரோனோ பேரிடர் காலங்களில் செய்த சிறப்பான பணிகள் பற்றியும் இக்கூட்டத்தில் கூறப்பட்டது.







# 2022

# MONTHLY REPORT

**தேதி:** 01/02/2022 **நேரம் :** 10:30am

**தலைப்பு:** திருப்பத்தூர் அரசு மருத்துவமனையை பார்வையிடுதல்

**மருத்துவமனை பெயர்:** அரசு மருத்துவமனை

**இடம் :** திருப்பத்தூர்

635601.

**மருத்துவமனை களப்பணி விவரங்கள்.**

- திருப்பத்தூர் அரசு மருத்துவனையில் புற நோயாளிகள் பிரிவில் முற்றுகையிட்ட போது நோயாளிகள் முகக்கவசம் இல்லாமலும் சமூக இடைவெளியை கடைபிடிக்காமலும் இருந்தனர்.
- அவசர பிரிவுகளில் படுக்கை வசதி குறைவாக உள்ள காரணத்தால் நோயாளிகளை அவசர பிரிவிற்கு வெளியில் சிகிச்சை அளிக்கப்பட்டது.
- ஆய்வகங்களை பற்றி மக்களிடம் தகவல் கேட்கப்பட்டது.
- ஸ்கேன் மற்றும் Xray போன்றவற்றை எடுக்கும்போது அதற்கான ரிப்போர்ட் ஏழு நாட்கள் எட்டு நாட்கள் கழித்து வருவதாகவும் மக்கள் அவர்களின் குறைகளை தெரிவித்தனர்.
- ஸ்கேன் ரிப்போர்ட் குறிப்பிட்ட நேரத்தில் கிடைக்காததால் அவசர மருத்துவத்திற்கு மக்கள் தனியார் மருத்துவமனையை நாடி செல்வதாக தெரியவந்தது.
- Xray மற்றும் CT ஸ்கேன் பிரிவுகளில் பணிபுரியும் ஆட்கள் 10 மணிக்கு மேல் வருவதாகவும் தாமதமாக பணியை தொடங்குவதாகவும் மக்களிடம் தகவல் பெறப்பட்டது.
- ஒருங்கிணைந்த கர்ப்பிணி மற்றும் மகப்பேறு சிசு அவசர சிகிச்சை பிரிவை முற்றுகையிட்டு கர்ப்பிணி பெண்களின் சிகிச்சை முறைகளை பார்வையிட்டோம்.
- நோயாளிகளுக்கு எந்தெந்த பிரிவு எங்கெங்கு உள்ளது என்று தெரியாமல் இருந்தனர்.
- சித்த மருத்துவ பிரிவை முற்றுகையிட்டு அவற்றை பார்வையிட்டோம்.





**தேதி:** 09/02/2022 **நேரம் :** 12 :30 PM

**தலைப்பு :** குனிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்தை (PHC) பார்வையிடுதல்.

**மருத்துவமனை பெயர்:**

குனிச்சி ஆரம்ப சுகாதார நிலையம் (PHC)

**இடம்:** குனிச்சி, நரியனேரி, காமராஜ் நகர்,

திருப்பத்தூர், 635654.

**குனிச்சி மருத்துவர் சந்திப்பு**

- Dr. தீபா Block Medical Officer. சந்தித்து குனிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்தில் எவ்வகை தேவைகள் உள்ளது, எந்த மாதிரியான வசதிகள் தேவைப்படுகிறது, மக்களுக்கான தேவைகள் போதுமானதாக உள்ளதா, அடிப்படை வசதிகள் என்னென்ன என்பதை பற்றிய தகவல் சேகரிக்கப்பட்டது.
- இதுவரை ஒருவாரத்திற்கு 80 கோரோனோ தடுப்பூசி நடத்துவதாக Dr. தீபா அவர்கள் கூறினார்.
- அதில் 44 அம்முகாமில் மருத்துவர்கள் பலர் கலந்துகொள்கின்றனர்.
- திருப்பத்தூர் மாவட்டத்தில் அணைத்து ஒன்றிய ஆரம்ப சுகாதார நிலையத்திலும் கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் பிரசவ தாய்மார்கள் கடந்த ஒரு வருடமாக உணவு அளிப்பதில்லை.
- NHM குடை யில் வரும் பணத்தில் அனைத்து மருத்துவவசதிக்கும் எடுத்துக்கொள்ளலாம் என இருந்தது ஆனால் தற்போது குறிப்பிட்ட பிரிவிற்கு மட்டுமே அந்த பணம் எடுத்துக்கொள்ள முடியும் என கூறினார்.
- VHWSC இதில் பத்து வருடமாக பணம் குறைவாக வருகிறது. (2400)
- பயனாளிகள் நல சங்கத்திற்கு வரும் பணமும் குறைவாக வருகிறது என தகவல் கிடைத்தது.
- கந்திலி ஒன்றியத்தில் 23 நபர்கள் VHN யில் உள்ளனர்.
- HI யில் 8 நபர்கள் புதிதாக போடப்பட்டுள்ளனர்
- கந்திலி ஒன்றிய PHC- யில் 13 நபர்களுக்கு 8 நபர்களே உள்ளனர் மீதம் 7 பேருக்கு காலி இடமாக உள்ளது.
- கந்திலி ஒன்றியத்தில் புதிதாக அரமிக்கப்பட்ட மினி க்ளினிக் அணைத்து இடங்களிலும் மூடப்பட்டுள்ளது.
- மூத்து லட்சுமி திட்டத்தின் கீழ் வரும் நிதி 72 சதவீதத்திற்கும் மேல் குடுத்து முடித்து விட்டனர்.
- அரசு போதுமானதாக நிதி ஒதுக்குவதில்லை எனவும் அவற்றை ஸ்பான்சர் பிடித்துக்கொள்ளுமாறு கூறுகிறார்கள் என்றும் Dr. தீபா அவர்கள் கூறினார்.






பிக்மி
கர்ப்பத்தை பதிவு செய்து
பிக்மி எண் (RCH ID) பெறும் முறைகள்
RCH ID
https://picme.tn.gov.in/picme_public
102




**தேதி:** 11/02/2022 **நேரம்:** காலை 11 Am

**தலைப்பு:** கதிரம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை பார்வையிடல்.

**மருத்துவமனை பெயர்.**

கதிரம்பட்டி ஆரம்ப சுகாதார நிலைய**ம்.**

**இடம்:** No.7, PHC. கதிரம்பட்டி, பஞ்சாயத்து அலுவலகம்,

முருகர் கோவில் அருகில், திருப்பத்தூர் நகராட்சி

635653.

**கதிரம்பட்டி மருத்துவர் சந்திப்பு.**

- Dr. **அபிநயா** MBBS. சந்தித்து கதிரம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை பற்றி தகவல் சேகரிக்கப்பட்டது.
- VHWSC கமிட்டி கூட்டம் மாதந்தோறும் நடைபெறுகிறது என்றும் ஆனால் அதற்கு ஒதுக்கி இருக்கும் நிதி பணம் பற்றி சரியாக தெரியவில்லை என்றும் Dr. அபிநயா கூறினார்.
- கட்டிடங்கள் இடிந்து விழுந்தும் அவற்றை முறையாக பராமரிப்பு இல்லாமல் காணப்படுகிறதுமாக இருக்கிறது இது தொடர்பாக கேட்டபோது கடந்த பல வருடங்களாக கட்டிடங்கள் பழுதுபார்க்கவில்லை என்ற தகவல் தெரிய வந்தது.
- கதிரம்பட்டி சுற்றியுள்ள பொம்மிக்குப்பம் மட்றப்பள்ளி சௌடேகுப்பம் போன்ற அணைத்து இடங்களுக்கும் ஆரம்ப சுகாதார நிலையமாக கதிராம்பட்டி சுகாதார நிலையம் காணப்படுகிறது ஆனால் அடிப்படை வசதி இல்லாமல் காணப்படுகிறது

**Annuxary**




நீங்கள் புகைபிடிக்க தடை செய்யப்பட்டுள்ள
பகுதிக்குள் நுழைகிறீர்கள்
இங்கு புகைபிடிப்பது COTPA சட்டம் 2003
எண் 4 மற்றும் 21-ன் படி தண்டனைக்குரியது




ORS
உலக மக்கள் தொகை தினம் 2017
குடும்ப நலத்துறை சென்னை-
KPT





கிராம ஊராட்சி சேவை
2014 - 2015.

**தேதி:** 21/02/2022 **நேரம்:** காலை 10:30am

**தலைப்பு.**

HSO திருப்பத்தூர் மாவட்டம் தனியார் மருத்துவமனை ஆய்வகங்களை பார்வையிட்டு தகவல் சேகரித்தல்.

**மருத்துவமனை பெயர்:**

ABI LAB**.**

**Reg No**, 99322

Dr. G.D.S ஜோ ஜார்ஜ் MBBS., (MD.,'Physician')

Phone No.

**இடம்:** புதுப்பேட்டை ரோடு,

திருப்பத்தூர். 635601.

**பொருள்:**

21/02/2022 அன்று திருப்பத்தூர் புதுப்பேட்டை ரோடு அபி இரத்த பரிசோத8னை நிலையத்தில் மருத்துவரை சந்தித்து தகவல்கள் சேகரிக்கப்பட்டது.

**மருத்துவர் சந்திப்பு.**

- டாக்டர்**. G.D.S ஜோ ஜார்ஜ்** MBBS., (MD.,'Physician') பொது நல மருத்துவர் சந்தித்து தகவல் சேகரிக்கப்பட்டு மக்கள் நலவாழ்வு குறித்தும் அதன் செயல்பாடுகள் குறித்தும் கூறப்பட்டது தனியார் துறை மருத்துவமனைகளை முறைப்படுத்துவதன் மூலம் நோயாளிகளுக்கும் ஏற்படும் நன்மைகளை எடுத்துரைக்கப்பட்டது.
- மருத்துவமனையில் அறுவை சிகிச்சை தவிர இரத்த பரிசோதனை மற்றும் அணைத்து வகையான வியாதிகளுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது மேலும் சிகிச்சைக்கு வரும் நோயாளிகளுக்கு மற்ற மருத்துவமனைகளை பரிந்துரையும் செய்கின்றோம், என டாக்டர் ஜோ கூறினார்.
- கர்பப்பை பற்றிய சந்தேகங்கள் கேட்கப்பட்டது, மற்றும் காப்பிட்டு அட்டை வைத்திருந்த்தால் அவசர உதவிக்கு வேலூர் CMC மருத்துவமனையை அணுகினால் போதுமானது என்று கூறினார்.
- மருத்துவர்களுக்கான மாதாந்திர கூட்டம் தவறாமல் நடைபெறுகிறது என்றும் கூட்ட நேரத்தை தலைவர் முடிவெடுப்பார் எனவும் கூறினார்.

**மருத்துவமனை வசதிகள்.**

- பத்துக்கும் மேற்பட்ட செவிலியர்கள் பணிபுரிகின்றனர்
- இரத்த பரிசோதனை மையம் மற்றும்
- Scan centers.
- Lab report center.
- நோயாளிகள் படுக்கை அரை

போன்ற வசதிகள் உள்ளன.












**தேதி ;** 20/2/2022 **நேரம் ;** 10am

**தலைப்பு:**

HSO அறிமுகம் பற்றி விழிப்புணர்வு. செய்யப்பட்டது.

**இடம்:** ரெட்டியூர்

**பொருள்:**

20/2/2022 அன்று திருப்பத்தூர் மாவட்டம் ரெட்டியூரில் HSO அறிமுக கூட்டம் நடத்தப்பட்டது இதில் சேன்ச் தொண்டு நிறுவனம் சரஸ்வதி இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து HSO குறித்தும் மக்கள் நல வாழ்வு இயக்கத்தின் சேவைகள் குறித்தும் விழிப்புணர்வு கொடுக்கப்பட்டது.

இதில் 10க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர்.

கோரோனோ தடுப்பூசி குறித்து மக்களிடம் ஆலோசனை கேட்கப்பட்டது கோரோனோ தடுப்பூசி போடாதவர்களுக்கு தடுப்பூசி செலுத்திக்கொள்வதன் நன்மைகள் குறித்து ஆலோசனை வழங்கப்பட்டது.

தொடர்ந்து ஐந்து நாட்கள் கோரோனோ தடுப்பூசியால் காய்ச்சல் ஏற்பட்டதாக மக்கள் கூறினர்.

தனியார் மருத்துவமனை மற்றும் அரசு மருத்துவனையில் நோயாளிகளுக்கான உரிமைகள் மற்றும் கடமைகள் குறித்து விளக்கமாக கூறப்பட்டது.





**தேதி :** 14/02/22 **நேரம் ;** 10am

**இடம்:** ப முத்தம் பட்டி.

**தலைப்பு:**

மக்கள் நல சேவை கூர்நோக்ககம் விழிப்புணர்வு.

**பொருள்:**

14/02/22 அன்று முத்தம்பட்டி ஏரி வேலை செய்யும் பெண்களிடத்தில் மக்கள் நல வாழ்வு குறித்து பேசப்பட்டது இதில் 20 க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர்.

**விளக்கம்:**

- பொதுத்துறை மருத்துவ சேவை அமைப்புகளை வலுப்படுத்துதல்.
- தானியர் மருத்துவ கட்டமைப்புகளை வலுப்படுத்துதல். பற்றி கூறப்பட்டது.
- தனியார் மருத்துவமனை மற்றும் அரசு மருத்துவனையில் நோயாளிகளுக்கான உரிமைகள் குறித்து விளக்கமாக கூறப்பட்டது.
- மக்கள் கண்டிப்பாக விழிப்புணர் உடன் இருக்கவேண்டும் மக்கள் அவசியமற்று தனியார் மருத்துவமனை நம்பி பணம் அதிகம் செலவு செய்ய வேண்டாம்.
- கோரோனோ தடுப்பூசி குறித்து மக்களிடம் ஆலோசனை கேட்கப்பட்டது கோரோனோ தடுப்பூசி போடாதவர்களுக்கு தடுப்பூசி செலுத்திக்கொள்வதன் நன்மைகள் குறித்து ஆலோசனை வழங்கப்பட்டது





**Financial Summary:**

STATEMENT

CENTRE FOR HEALTH GENDER EQUALITY ( CHANGE ) ,
BRINDHAVANAM, KASINAIYAKKANPATTI POST, KANDILI,
TIRUPATTUR DISTRICT – 635 901

AY - 2021 - 2022

FY - 2020 - 2021

**CENTRE FOR HEALTHAND GENDER EQUALITY (CHANGE)**
**BRINDHAVANAM, KASINAIYAKKANPATTI (POST),KANDILI (VIA) ,**
**TIRUPATTUR DISTRICT -635901.**

**INCOME AND EXPENDITURE ACCOUNT FOR THE YEAR ENDED 31ST MARCH 2021**

| Expenditures | AMOUNT (In Rs) | Incomes | AMOUNT (In Rs) |
|---|---|---|---|
| Educational Matrials for Rural area children | 21,540 | Funds in TN Forces | 4,000 |
| Meeting awareness Programme for Grammasapa in Villages | 35,210 | Invidiual Donor | 7,000 |
| Media Sensitization | 28,540 | Thozi - Deeps | 125,405 |
| Womens Rights Programme etc., | 43,142 | Local Public Contributions | 52,100 |
| Federation Trainings | 34,120 | Urban Area Voluntaries | 42,230 |
| Rent paid | 12,000 | Corona Voluntaries | 90,520 |
| Interactive Meetings for children Health & Education | 41,205 | | |
| Stage Programme for unchallenge Students | 18,540 | | |
| Corona Safty skit for Rural Area | 70,548 | | |
| Excess Of Income Over Expenditure | 16410 | | |
| | 321,255 | | 321,255 |

LRK & ASSOCIATES TIRUPATTUR 04179-298078 Chartered Accountants

**For LRK & ASSOCIATES**
**Chartered Accountants**
**(FRN-021347S)**

**L. RAM KUMAR,B.Com.,ACA.,**
**M.No. 238939**
**Proprietor.**

**CENTRE FOR HEALTHAND GENDER EQUALITY (CHANGE)**
**BRINDHAVANAM, KASINAIYAKKANPATTI (POST),KANDILI (VIA) ,**
**TIRUPATTUR DISTRICT -635901.**
**RECEIPTS AND PAYMENTS A/C FOR THE YEAR ENDED 31ST MARCH 21**

(IN RS.)

| RECEIPTS | Amount | PAYMENTS | Amount |
|---|---|---|---|
| **To Opening Balance** | | | |
| - Cash at Bank | 9,810.00 | By Educational Matrials for Rural | |
| - Cash In Hand | 14,500.00 | area children | 21,540 |
| To Funds in TN Forces | 4,000.00 | By Meeting awareness Programme for Grammasapa in Villages | 35,210 |
| To Invidiual Donor | 7,000.00 | | |
| | | BY Media Sensitization | 28,540 |
| To Urban area Voluntaries | 42,230.00 | | |
| | | By Womens Rights Programme etc., | 43,142 |
| To Thozi - Deeps | 125,405.00 | | |
| | | By Federation Trainings | 34,120 |
| To Local Public Contributions | 52,100.00 | | |
| | | By Interactive Meetings for children | |
| To Corona Voluntaries | 90,520.00 | Health & Education | 41,205 |
| | | By Stage Programme for unchallenge Students | 18,540 |
| | | By Rent | 12,000 |
| | | By Corona Safty skit for Rural Area | 70,548 |
| | | By Closing Balance | |
| | | - Cash at Banks | 6,310 |
| | | - Cash in hand | 6,100 |
| **Total** | **317,255.00** | **Total** | **317,255** |

LRK & ASSOCIATES TIRUPATTUR 04179-290078 Chartered Accountants

**For LRK & ASSOCIATES**
**Chartered Accountants**
**(FRN-021347S)**

**L. RAM KUMAR,B.Com.,ACA.,**
**M.No. 238933**
**Proprietor.**

**CENTRE FOR HEALTHAND GENDER EQUALITY (CHANGE)**
**BRINDHAVANAM, KASINAIYAKKANPATTI (POST),KANDILI (VIA) ,**
**TIRUPATTUR DISTRICT -635901.**

**BALANCE SHEET AS ON 31ST MARCH 2021**

| Liabilities | Amount | Assets | Amount | Amount |
|---|---|---|---|---|
| **Capital Account** | | | | |
| Capital Funds | **63,929.00** | Cash and Bank Balance | | 12,410.00 |
| | | Other Asset | | **51,519.00** |
| **Total** | **63,929.00** | **Total** | | **63,929.00** |

LRK & ASSOCIATES * TIRUPATTUR 04179-290078 * Chart... untants

**For LRK & ASSOCIATES**
**Chartered Accountants**
**(FRN-021347S)**

**L. RAM KUMAR,B.Com.,ACA.,**
**M.No. 238939**
**Proprietor.**

# மக்கள் நலவாழ்வு இயக்கம்

## மக்கள் நல சேவை கூர்நோக்ககம்

**தலைப்பு.**

மாவட்ட அளவிலான கூர்நோக்காளர்களுக்கான தன்னார்வலர் கூட்டம், திருப்பத்தூர் மாவட்டம்.

**தேதி.**

26.02.2022

**நேரம்.**

காலை 10.00 AM.

**இடம்.**

DAS-CBR அலுவலகம், திருப்பத்தூர்.

**பொருள்.**

திருப்பத்தூர் மாவட்டத்தில் மாவட்ட அளவிலான கூர்நோக்காளர்களுக்கான தன்னார்வலர்கள் கூட்டம் நடைபெற்றது இதில் தன்னார்வலர்கள், தாய்மார்கள், கல்லூரி மாணவர்கள், தொண்டு நிறுவனங்கள், VHWSC கமிட்டி உறுப்பினர்கள், பெண் தொழிலார்கள் நல சங்க உறுப்பினர்கள், போன்ற 50 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

**தலைமை.**

- டாக்டர் **பா சந்திரா** அவர்கள் இந்நிகழ்ச்சியினை தலைமை ஏற்று நடத்தினார்.
- நலவாழ்வு குறித்து ஆலோசனை வழங்கினார் மற்றும் தொடக்கூடிய நோய் பற்றியும் தீண்டத்தகாத நோய் பற்றியும் விளக்கினார்.
- மனித உடலில் ஏற்படும் வியாதியை தடுக்க நாம் கடைபிடிக்க வேண்டியது நல்ல உணவுமுறை மட்டுமே என்று கூறினார்.
- இளைஞர்களை ஊக்குவித்து உரிமைக்காக குரல் கொடுக்கவேண்டும் என்றும் இந்நாட்டின் மிக பெரிய தூண் இளைஞர்கள் தன என்றும் பாராட்டினார்

**வரவேற்புரை.**

ஆசிரியர் திரு ஆறுமுகம் அவர்கள் இந்நிகழ்வினை வரவேற்புரையுடன் துவங்கி வைத்தார்.

**<u>விளக்கவுரை.</u>**

- திரு. **சுரேஷ்.** SOCHARA, சென்னை. இந்நிகழ்ச்சிக்கு முக்கிய பங்காற்றினார்.
- Covid-19 சம்பத்தப்பட்ட கேள்விகளை தன்னார்வலர்களிடம் கேட்டறிந்தார்.
- தடுப்பூசியின் பயன்கள் குறித்தும் தடுப்பூசி போடாதவர்களுக்கு தடுப்பூசி எவ்வகையில் நம் உயிரை பாதுகாக்கும் என்பது குறித்தும் விளக்கினார்.
- Paracetamol மற்றும் Dolo மாத்திரைகளின் பயன்கள் குறித்து கூறினார். அம்மாத்திரைகள் அளவு ஒன்றுதான் ஆனால் நிறுவனத்தின் பெயர் மற்றும் மாறுதல் ஏற்படும் அவற்றை எந்த அளவிற்கு எடுத்துக்கொள்ளலாம் எவ்வளவு எடுத்துக்கொண்டால் நம் உடலுக்கு நல்லது எனவும் கூறினார் என்று கூறினார்.
- திரு. **பழனிவேல்சாமி** (HAPS) தொண்டு நிறுவனர் அவர்கள் நோயாளிகளின் உரிமைகள் மற்றும் அந்த உரிமைகள் எவ்வகையில் அவற்றை அணுகுதல் குறித்து விளக்கினார்.
- மருத்துவர்கள் சட்டம் 2010 மருத்துவர்கள் தவறுதலாக ஏதேனும் அறுவைசிகிச்சை செய்துவிட்டால் அம்மருத்துவரிடம் பணம் மட்டுமே வசூலிக்க முடியுமே தவிர வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கமுடியுது ஆனால் CEA-Clinical Establishment Act 2018 மூலம் இந்த சட்டத்தினால் தண்டனை வழக்கு கடைபிடிக்கப்பட்டது என்று கூறினார்.
- மருத்துவ நிறுவனங்கள் முறைப்படுத்தும் சட்டம் மத்திய அரசால் கொண்டுவரப்பட்டது என்றும் கூறினார்.
- TANSACS திட்டத்தின் மூலம் AIDS மற்றும் HIV பற்றிய விழிப்புணர்வு நடத்தப்பட்டது.
- திருமதி **சரஸ்வதி** (CHANGE) தொண்டு நிறுவனர் செயல்படுத்தப்பட்ட பணிகள் பற்றி விளக்கினார்.
- திருமதி **உஷா** தோழி பெண் தொழிலாளர்கள் நல சங்க செயலாளர் இந்நிகழ்ச்சியினை ஒருங்கிணைப்பு செய்தார்.
- இறுதியாக நன்றியுறை கூறி இந்நிகழ்ச்சி முடிந்தது.


மக்கள் நலவாழ்வு இயக்கம்
MAKKAL NALAVAZHVU IYAKKAM [TN Chapter of PHM]
மக்கள் நலவாழ்வு கூர்நோக்ககம்
PEOPLES HEALTH SYSTEM OBSERVATORY
26-02-22
திருப்பத்தூர்








**தலைப்பு.**

உலக மகளிர் தின விழா-2022

**தேதி**

06/03/2022

**நேரம்.**

காலை 10.00 AM.

**இடம்.**

DAS-CBR அலுவலகம், திருப்பத்தூர்.

**பொருள்.**

உலக மகளிர் தினவிழாவை முன்னிட்டு அணைத்து பெண் தொழிலாளர்களுக்கும் திருப்பத்தூர் DAS-CBR அலுவலகத்தில் மகளிர் தினவிழா கொண்டாடப்பட்டது. இதில் 50 க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர்.

**வரவேற்பு**

மகளிர் தினவிழாவில் சேன்ச் தொண்டு நிறுவனர் சரஸ்வதி அவர்கள் இவ்விழாவை ஒருங்கிணைப்பு செய்து அணைத்து பெண் தொழிலாளர்களையும் வரவேற்புரை செய்தார்.

**தலைமை**

டாக்டர் பா சந்திரா அவர்கள் இந்நிகழ்வை தலைமை ஏற்று நடத்தினார் பெண் உரிமைகளுக்காகவும் பெண் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து குறித்து விழிப்புணர்வு ஆற்றினார்.

**தலைமை விருந்தினர்**

திருமதி மஹாலட்சுமி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் மேலும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி குறித்து விழிப்புணர்வு செய்தார்.

**கூட்ட ஆலோசனை**

மக்கள் நல வாழ்வு குறித்து மக்கள் நல சேவை கூர்நோக்ககம் குறித்து சேன்ச் தொண்டு நிறுவனர் சரஸ்வதி அவர்கள் விளக்கினார் தனியார் மருத்துவமனையை முறைப்படுத்துதல் மற்றும் அரசு மருத்துவமனையை வலுப்படுத்துதல் குறித்து விளக்கினார்

திரு பழனிவேல் சாமீ ஹேப்ஸ் தொண்டு நிறுவனர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பெண்களை ஊக்குவித்து நோயாளிகளின் உரிமைகள் குறித்து விளக்கினார்.

மேலும் மாவட்ட அளவில் நடக்கக்கூடிய நல வாழ்வு சபை மூலம் அனைவரும் கலந்து கொண்டு தங்களுக்கான தேவைகளை மாவட்ட ஆட்சியரிடம் கேட்கலாம் மற்றும் பிரச்சனைகளை குறித்து மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கையாக முன் வைக்கலாம் என கூறினார்.

திருமதி மஹாலட்சுமி குழந்தைகளின் வளர்ச்சி குறித்தும் குழந்தைகள் எடுத்துக்கொள்ள கூடிய இயற்கை உணவுமுறைகள் குறித்து கூறினார்.

**முடிவுரை**

இவ்விழாவினை ஆ டல் பாடல் உடன் கண்டுகளித்தனர் மேலும் நலவாழ்வு பற்றி பல விஷங்களை கற்று கொண்டதாக தெரிவித்தனர் தொடர்ந்து நலவாழ்வு இயக்கத்தில் பங்கு பெறுவோம் என தொழிலாளர்கள் கூறினார்கள்.

**ANNUXERY**







தோழி தமிழ்நாடு
நடத்தும்
உலக மகளிர் தினம் 8 - மார்ச் - 2022
பணியிடம் முதல் பள்ளிக்கூடம் வரை
திருப்பத்தூர் மாவட்டம்

# THANK YOU